## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்தல் மற்றும் கொள்முதல் விலையை உயர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொப்பரைத் தேங்காய் கொள்முதல் குறித்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள், திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக முனைவர் கோவி. செழியன் அவர்கள், திரு. கா. அண்ணாதுரை அவர்கள், திரு. N. அசோக்குமார் அவர்கள் மற்றும் திரு. தி. வேல்முருகன் ஆகியோர் விதி 55–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்காகவும், தமிழகத்தினுடைய மூன்றில் ஒரு பகுதியில் விளைகின்ற தேங்காய்களுக்குச் சொந்தக்காரரர்களான தென்னை விவசாயிகள் மற்றும் தமிழகத்திலே 60–க்கும் மேற்பட்ட சட்டமன்றத் தொகுதிகளிலே தென்னை விவசாயத்தையே பிரதானமாகக் கொண்டிருக்கிற மொத்த தென்னை விவசாயிகளுக்காகவும் நான் மிகச் சுருக்கமாகப் பேச விழைகிறேன்.

அதாவது, சென்ற ஆண்டு இதே தேதியில் கொப்பரைத் தேங்காயின் விலை கிலோ ஒன்றிற்கு ரூ.130/–லிருந்து ரூ.140/– வரை விற்றது. இன்றைக்கு கொப்பரைத் தேங்காயினுடைய அதிகபட்ச விலை ரூ.87/–. இதன்மூலம் தென்னை விவசாயிகள் பெரும் துயரத்திற்கு ஆளாகியிருக்கின்றனர். இந்தியாவிலே தென்னை விவசாயம் அதிகமாக நடைபெறுகிற முதல் மாநிலம் தமிழகம், இரண்டாவது கர்நாடகம், மூன்றாவது கேரளம். அதுவும் தமிழகத்திலே தென்னை விவசாயம் அதிகம் நடைபெறுகிற இடம் பொள்ளாச்சி சுற்று வட்டாரப் பகுதி. எனவே, பொள்ளாச்சி சுற்று வட்டாரப் பகுதி விவசாயிகளுடைய ஒட்டுமொத்த நலன் கருதியும், தமிழகத்தினுடைய தென்னை விவசாயிகளுடைய

[முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்] [2022 ஏப்ரல் 12 ஒட்டுமொத்த நலன் கருதியும் கொப்பரைத் தேங்காய்க்கு மத்திய அரசிடம் கோரி, 105 ரூபாய் 90 பைசாவை மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் பெற்றுக்கொடுத்தார்கள். மேலும், 10 ரூபாய் அளவுக்கு உயர்த்திக் கொடுத்து, மாநில அரசின் நிதி ஆதாரத்தோடு, குறைந்தபட்சமாக ஒரு கிலோ கொப்பரைத் தேங்காய் ரூ.120/– அல்லது ரூ.125/–க்குக் கொள்முதல் செய்யக்கூடிய நிலையை தமிழக அரசு உருவாக்கித் தர வேண்டுமென்று சுருக்கமாகக் கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. N. அசோக்குமார் அவர்கள்.

**திரு. N. அசோக்குமார்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி, பட்டுக்கோட்டை பகுதி, தென்னை விவசாயம் நிறைந்த பகுதி. தென்னையை நம்பித்தான் பேராவூரணி பகுதி மக்களுடைய வாழ்வாதாரம் அமைந்திருக்கின்றது. மூன்று ஆண்டுகளுக்கு முன்பு வீசிய கஜா புயலின் விளைவாக பேராவூரணி, பட்டுக்கோட்டை பகுதியில் முழுவதுமாக தென்னை அழிந்துவிட்டது. அந்தச் சமயத்தில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அப்பொழுது எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்கள். உடனடியாக பேராவூரணி, பட்டுக்கோட்டை பகுதிக்கு வந்து எங்களுக்கெல்லாம் ஆறுதல் சொல்லி நிச்சயமாக இந்தப் பாதிப்புக்கு உங்களுக்கு நிவாரணம் பெற்றுத் தருகிறேன் என்று கூறி அந்த நிவாரணத்தைப் பெற்றுத் தந்தார்கள். அவர்களுக்கு இந்தத் தருணத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தென்னை விவசாயிகள் போதிய விலையில்லாததாலும், புயலால் பாதிக்கப்பட்டதாலும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். விலையைப் பொறுத்தவரை, 20 ரூபாய்க்கு விற்ற தேங்காய் தற்போது 10 ரூபாய், 11 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அதேபோல NAFED, கொப்பரைத் தேங்காய்க்கு நிர்ணயம் செய்திருக்கும் விலை 105/– ரூபாய் ஆகும். அதனை 125 ரூபாயாக மாற்றி நிச்சயமாக எங்களுடைய வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களையும் வேண்டுகிறேன். நன்றி, வணக்கம்.

*2022 ஏப்ரல் 12*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் கொறடா கோவி. செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கா. அண்ணாதுரை, திரு. N. அசோக்குமார், திரு. தி. வேல்முருகன் ஆகியோரும் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையம் வேண்டும் என்ற கோரிக்கையையும், முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள் பொள்ளாச்சியில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையையும் முன்வைத்துள்ளார்கள். ஆனால், இப்பொழுது விலையைப் பற்றிப் பேசுகின்றார்கள். இருந்தாலும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய அரசு கண்டிப்பாக உங்களுடைய கோரிக்கைகளை உன்னிப்பாகக் கவனிக்கும், நிறைவேற்றும். ஆக, விலையைப் பொறுத்தவரையில், ஒன்றிய அரசு விலையை நிர்ணயித்து அதற்கேற்றாற்போல் அவர்கள் கொள்முதல் செய்கிறார்கள். அந்த அடிப்படையில் இந்த ஆண்டு கொப்பரைத் தேங்காய் ஒரு கிலோ 105 ரூபாய் 90 பைசாவுக்கும், பந்து கொப்பரை கிலோ 111 ரூபாய்க்கும் விலை நிர்ணயம் செய்யப்பட்டு கொள்முதல் செய்யப்படுகிறது. 2019 ஆம் ஆண்டு 310 மெட்ரிக் டன் அளவுக்கு கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. 2020 ஆம் ஆண்டு 43 மெட்ரிக் டன்தான் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. 2021 ஆம் ஆண்டு 39 மெட்ரிக் டன்தான் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. அது அவர்களுடைய ஆட்சி. இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆட்சியில், 2022 ஆம் ஆண்டு, நேற்றுவரை கிட்டத்தட்ட 1,232 மெட்ரிக் டன் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அப்பொழுது இந்த அளவுக்குக் கொள்முதல் செய்யப்படவில்லை.*

*முற்பகல் 11–25*

*கிட்டத்தட்ட 43 விற்பனை நிலையங்கள் மூலமாக கொப்பரைத் தேங்காய்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பொறுத்தவரையில், தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை நிலையத்தின் NAFED மூலமாக, கொப்பரைத் தேங்காய்கள் கொள்முதல்*

[திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்] [2022 ஏப்ரல் 12

செய்யப்படுகின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, இதுவரையில், 10 மாத கால ஆட்சியில், நாங்கள் நிர்வாகத்தின் மூலமாக, அரசு மூலமாக, கொப்பரைத் தேங்காயின் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு முன்மொழிவை ஒன்றிய அரசுக்கு அனுப்பியிருக்கின்றோம். ஆக, வெகு விரைவில் கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பொள்ளாச்சியில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்யப்பட வேண்டும் என்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்போது கவன ஈர்ப்பு அறிவிப்பிற்கு முன்னறிவிப்பு கொடுத்தார்களோ, அப்போதிருந்து, அதாவது, நேற்றிலிருந்து கொள்முதல் செய்வதற்கு தொடர் நடவடிக்கையாக, பொள்ளாச்சியிலும் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்ய வேண்டும் என்று உத்தரவு வழங்கப்பட்டதையடுத்து, பொள்ளாச்சியில் இன்று முதல் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்யப்படுகிறது. தமிழகத்தில், இதுவரையில் 43 இடங்களில் கொள்முதல் நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன. அதை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இதில் என்னவொரு பிரச்சினை இருக்கிறது என்றால், தனியார்கள் கொள்முதல் செய்கின்ற விலை அதிகமாகும்போது, அந்தக் கொப்பரைத் தேங்காய்களை அவர்களிடம் விற்பனை செய்கிறார்கள்; இதைப் பயன்படுத்தமாட்டார்கள். தற்போது, அங்கே விலை ரூ.82/- என்ற அளவில் குறைந்துள்ளபோது, கேள்வி கேட்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதுதான் நிலைமை. நீங்கள் ஒரு காலத்தில் நிதியாதாரம் இல்லை, இல்லை என்று சொன்னீர்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், உங்களுடைய கோரிக்கைகளை, யார் யாரெல்லாம் கேட்கின்றார்களோ, என்னென்ன கேட்கின்றார்களோ, அவற்றுக்கெல்லாம் நிதியாதாரத்தைப் பெற்று கொடுக்கின்ற முதல்வராக நம்முடைய முதல்வர் அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, விவசாயிகளுடைய வாழ்வில் வசந்தம் வீசும்,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், நான் ஒன்றேயொன்றை மட்டும் கேட்கிறேன். Container Lorries சீனாவில் இருக்கின்றன. Container Lorries கிடைக்காததால்தான், கொள்முதல் செய்ததைக் கொண்டு செல்ல முடியவில்லை; அதற்கு ஏற்பாடு செய்தால் விலை குறையும் என்கிறார்கள். அதற்கும் முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*2022 ஏப்ரல் 12*]

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கூறியது பற்றியும் கண்டிப்பாக ஆலோசனை செய்யப்படும்.*

## (ஆ) தீப்பெட்டித் தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்கள் விலை உயர்வால் உற்பத்தி நிறுத்தம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தீப்பெட்டித் தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்களின் விலை உயர்வு குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் முனைவர் கோவி. செழியன் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். தங்கப்பாண்டியன் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. A.R.R. ரகுராமன் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன் அவர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) சார்பாக மாண்புமிகு உறுப்பினர்திரு. வி.பி. நாகைமாலி அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள் ஆகியோர் விதி எண் 55–ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கலாம். முதலாவதாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்கள் .*

**திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். விருதுநகர் மாவட்டம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் தீப்பெட்டி உற்பத்தியாளர்கள்*